வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.914/அ1/2026, நாள். .04.2026.

பொருள் :- பள்ளிக் கல்வி– வேலூர் மாவட்டம் –அமைச்சுப்பணி – பவானிசாகர் பயிற்சி – அரசுஅலுவலர் பயிற்சி நிலையம் – இளநிலை உதவியாளர் /உதவியாளர்களுக்கான 41 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப்பயிற்சி – பயிற்சியாளர்களின் விவரம் கோருதல்/ சரிபார்த்தல் விவரங்கள் அனுப்புதல்– சார்பு

பார்வை :- சென்னை–06.தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர்(பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.21275/அ4/இ4/2026 நாள்.15.04.2026

..........

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ஆளுகையின் கீழ் செயல்படும் அலுவலகம் மற்றும் பள்ளிகளில் பவானி சாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் இளநிலை உதவியாளர் / உதவியாளர்களுக்கான 41 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப்பயிற்சிக்கு பணியாளர்களை முதுநிலை வரிசைப்படி அனுப்பி வைப்பதற்கு பணியாளர்களின் விவரங்கள் கொண்ட சரிபார்ப்புப்பட்டியல் (தற்காலிக முதுநிலைப்பட்டியல்) இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

இம்முதுநிலை பட்டியலில், டிசம்பர் 2024ஆம் ஆண்டிற்கு முன்னர் பணியில் சேர்ந்துப் பயிற்சிபெற வேண்டி நிலுவையில் உள்ள இளநிலை உதவியாளர்/உதவியாளர்கள் பெயர்கள் நிலுவைப்பட்டியலில் விடுபட்டிருப்பின் அவர்களது விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு 16.04.2026 அன்று காலை 11.00 மணிக்குள் அனுப்பிவைக்குமாறு அனைத்து அலுவலர்கள்/ தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அதற்கு பிறகு பெறப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும், விவரங்கள் கிடைக்கப் பெறாவிடில் இருப்பில் உள்ள விவரங்களை கொண்டு மேல் நடவடிக்கை தொடரப்படும் என்பதனையும் இதன்வழி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், சரிபார்ப்புப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கலங்களில் பணியாளர்களின் விவரங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாமல் இருப்பின் அவ்விவரங்களை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து இவ்வலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவிட்டு, அதன் கையொப்பமிட்ட நகலினை அ–1 பிரிவுக்கு தனிநபர் மூலம் நேரில் ஒப்படைக்குமாறு அலுவலர்கள்/தலைமையசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், எவரது பெயரும் விடுபடுதல் கூடாது, தவறும்பட்சத்தில் சார்ந்த அலுவலரே/தலைமையாசிரியரே பொறுப்பேற்க நேரிடும் என அனைத்து அலுவலர்களுக்கு /தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு:-

1. பெயர்ப் பட்டியல்
2. படிவம்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,

1. மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை/தொடக்கக் கல்வி/தனியார் பள்ளி), வேலூர்.
3. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர், அரசு (முஸ்லீம்) மேல்நிலைப் பள்ளி வளாகம், வேலூர்.
4. அரசு/நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு உடனடி நடவடிக்கைக்காக அனுப்பலாகிறது.